S.T.C.No.1150/2016 Date:03.09.2022

அ.சா.1 பூபால்

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை-**

1) மேற்படி லாரிக்கான தவனை தொகையை எதிரி செலுத்தவில்லை என்று லாரியை மீட்டு தருமாறு ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் எதிரியின் மீது கடந்த 2013 அல்லது 2014 -ல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து போலீஸார் விசாரித்தார்களா என்றால் அது பற்றி தெரியவில்லை. அதன் பின்னிட்டு எதிரியின் வீட்டிற்கு சென்று தவணை தொகையை கேட்டேன் என்றால் சரிதான். மேற்படி தவணை தொகையை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) 2016-ல் எனது வீட்டின் மீது வங்கியில் கடன் வாங்கினேனா என்றால் 2010-ல் வாங்கினேன். மேற்படி கடன் தொடர்பாக என் மீதும் என் மனைவி மீதும் திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் வங்கியின் சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. நானும் எனது மனைவியும் பழனிசாமி என்பவரிடம் கடன் பெற்று திருப்பி தரவில்லை என அ.வ.எண். 46/2022 என்ற வழக்கு திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் அவ்வாறு வழக்கு உள்ளது.

3) 30.09.2016-ல் என்னிடம் வழக்கு காசோலை தொகை இருந்தது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் உள்ளது தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வழக்கு காசோலை என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் கணக்கில் போதிய பணம் இல்லாததால் திருப்பப்பட்டது. மேற்படி காரணத்தை கூறிதான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். சட்ட அறிவிப்பில் பாரா 3-ல் விற்கிரய ஒப்பந்தப்படி வங்கிக்கு செலுத்தவேண்டிய வங்கி கடன் மாத தவனை தொகையை செலுத்தாமலும் இருந்து வருகிறீர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அவ்வாறு வழக்கறிஞரிடம் சொல்லவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

4) எனக்கு ரூ.5,20,700/- என்பது பெரிய தொகை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் என்னிடம் மேற்படி தொகை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நிலத்தை கிரைய ஒப்பந்தம் போட்டு அதன் மூலம் கிடைத்த பணத்தை எதிரியிடம் கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை நான் தவறாக பயன்படுத்தியதாக என் மீது எதிரி ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு புகார் அளித்து அதன் பேரில் என்னை காவல் நியைத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல.

5) எதிரியின் 17 காசோலைகளும் (517284 முதல் 517300) ATM மற்றும் ஆவணங்கள் தொலைந்து போனதாக ஜலகண்டாபுரம் காவல் நிலையம் மற்றும் சேலம் சைபர் கிரைம் ஆகியவற்றில் 07.03.2014-ல் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனவே மேற்படி காசோலைகளுக்கு பணம் வழங்க வேண்டாமென எதிரி வங்கிக்கு கடிதம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.09.2016-ல் எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்பதும் நான் எதிரிக்கு 30.09.2016-ல் ரூ,5,20,700/- கொடுத்தேன் என்பதும் பொய் என்றால் சரியல்ல. எதிரிக்கும் மேற்படி தேதியில் கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனவே எதிரி பின்தேதியிட்ட காசோலை கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

6) நான் சொல்லும் தேதியில் எதிரி ஊரிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. சட்ட அறிவிப்பிலும் எதிரிக்கு தொகை எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்பது போன்ற விபரங்கள் குறிப்பிடவில்லை உண்மையில் அவ்வாறு கொடுக்கவில்லை என்பதால் தான் அது பற்றி தெரிவிக்கவில்லை. சட்ட அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்றால் எதிரி முறையாக பதிலறிவிப்பு கொடுத்திருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல. சட்டப்படி ஏற்றுக்கொள்ளும்படியான ஆவணங்களைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்படாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/- Boopal

Sd/- S.R.Babu 03.09.2022,
Judicial Magistrate No.1, Sankari.